உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ம்ருதிமுக்தாபலம்

என்கிற

வைத்யநாததீக்ஷிதீயம்

ஆஹ்னிக காண்டம்

(பூர்வபாகம்)

(தமிழுரையுடன்)

ஸஞ்சிகை—1

REGISTRAR OF BOOKS
10 JUL 1950
MADRAS

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை (Regd.)

கும்பகோணம்.

1950 [விலை ரூ. 1/-

உ

வைத்யநாததீக்ஷிதீய ஆஹ்னிக காண்டம் பூர்வபாகம் முதல் ஸஞ்சிகையிலுள்ள விஷயங்கள்.

விடியற்காலத்தில் எழுந்திருப்பது முதலியவை.

விழித்த பிறகு ஜபிக்க வேண்டிய மந்த்ரங்கள்.

விடியற்காலத்தில் பார்க்கக்கூடியவையும், மற்றதும்.

வெளியில் ஸஞ்சாரம்.

சரீர சுத்தி விதி.

கண்டூஷ விதி. (வாய்க்கொப்புளித்தல்)

ஆசமன விதி.

ஆசமனப்ரசம்ஸை.

வைதிக வர்த்தினீ பிரஸ், 44, கரிக்காரத்தெரு, கும்பகோணம்.

श्रीपरमात्मने नमः ॥

वैद्यनाथदीक्षितीयस्मृतिमुक्ताफले

आह्निककाण्डः ॥

अथेदानीमाह्निककाण्डः प्रस्तूयते ॥

* ब्राह्मे मुहूर्ते प्रबोधादि ॥ *

तत्र मनुः—

'ब्राह्मे मुहूर्ते बुध्येत धर्मार्थौ चानुचिन्तयेत् । कायक्लेशांश्च तन्मूलान् वेदतत्त्वार्थमेव च' इति । वेदतत्त्वार्थः = परमात्मा ।

உ

வைத்யநாததீக்ஷிதீய ஸ்ம்ருதிமுக்தாபலத்தில்

ஆஹ்னிக காண்டம்.

இனி இப்பொழுது ஆஹ்னிககாண்டம் ஆரம்பிக்கப்படுகிறது. '**अथ**' என்ற பதத்திற்கு வர்ணாச்ரமகாண்டம் முடிந்த பிறகு என்பது பொருள். அதே பதம் க்ரந்தாரம்பத்தில் செய்யும் மங்களத்திற்குமாகிறது. அஹஸ் என்ற பதத்தால் பகலும், இராத்திரியும் சொல்லப்படுகின்றன. அவைகளில் செய்ய வேண்டிய கார்யங்கள் ஆஹ்னிகங்களெனப்படும். ஆஹ்னிகங்களைச் சொல்லும் காண்டம் ஆஹ்னிககாண்டம் எனப்படுகிறது. காலையில் விழிப்பது முதல் இரவில் படுக்கும் வரையிலுள்ள கார்யங்களை, மன்வாதி தர்மசாஸ்த்ரங்களை அனுஸரித்துச் சொல்லும் க்ரந்தமிதுவாம்.

விடியற்காலத்தில் எழுந்திருப்பது முதலியவை.

அந்த ஆஹ்னிகங்களுள் விடியற்காலத்தில் எழுந்திருப்பதைப்பற்றி மனு சொல்வது:— ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்திருக்கவேண்டும். தர்மத்தையும் அர்த்தத்தையும் சிந்

ததா ச வ்யாஸ:—

ப்ராஹ்மே முஹூர்தே உத்தாய தர்மமர்த்தம் ச சிந்தயேத் । காயக்லேசம் ததுத்பூதம் த்யாயேத மனஸேச்வரம் இதி ॥

யாஜ்ஞவல்க்ய:—

ப்ராஹ்மே முஹூர்தே உத்தாய சிந்தயேதாத்மனோ ஹிதம் । தர்மார்த்தகாமான் ஸ்வே காலே யதாசக்தி ந ஹாபயேத் இதி ॥

ப்ராஹ்மே முஹூர்தே = பச்சிமயாமார்த்தே ப்ரபு[illegible] ஸ்வஸ்ய ஆத்மனோ ஹிதம் க்ருதம் கரிஷ்யமாணம் ச வேதார்த்தரூபம் சிந்தயேத் । ததோ தர்மார்த்தகாமான் ஸ்வோசிதே

திக்கவேண்டும். அவைகளாலுண்டாகும் தேஹச்ரமங்களையும், வேதத்தின் உண்மைப் பொருளான பரமாத்மாவையும் சிந்திக்கவேண்டும். இனி பகலிலும் இரவிலும் இவ்விதம் தர்மத்தைச் செய்யவேண்டும் என்றும், இவ்விதம் பொருளைத்தேட வேண்டுமென்றும் சிந்திக்கவேண்டும். அவைகளில் தேஹத்திற்கு ச்ரமமதிகமாகி, தர்மார்த்தங்கள் அல்பமாகாமல், அல்ப ச்ரமத்தால் அதிகதர்மமும் அதிக அர்த்தமும் கிடைக்கும் வழியைச் சிந்திக்கவேண்டும். வேததத்வார்த்தமென்பதற்கு வேதத்தில் விதித்துள்ள கர்மங்களும், ப்ரஹ்மம் என்றும் பொருளுண்டு.

வ்யாஸர்:— ப்ராம்ஹமுஹூர்த்தத்தில் எழுந்து தர்மம் அர்த்தம் இவைகளையும், அவைகளாலுண்டாகும் தேஹச்ரமத்தையும் சிந்திக்கவேண்டும், ஈச்வரனையும் மனதால் தியானிக்க வேண்டும்.

யாக்ஞவல்க்யர்:— ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து தனக்கு ஹிதமான கார்யத்தைச் சிந்திக்கவேண்டும். தர்மம், அர்த்தம், காமம் இவைகளை அவைகளுக்கு உரித்தான காலத்தில் தன் சக்திக்குத் தகுந்தவாறு விடாமல் அனுஷ்டிக்கவேண்டும். ப்ராம்ஹமுஹூர்த்தத்தில்-இராத்திரியின் கடைசி யாமத்தின் பின்பாகத்தில் விழித்தவன், தனக்கு ஹிதத்தை (முன் செய்ததையும் இனிச் செய்யவேண்டியதையும்) வேதார்த்த ரூபமாயுள்ளதைச் சிந்திக்கவேண்டும். பிறகு தர்மார்த்தகாம

𑌕𑌾𑌲𑍇 𑌯𑌥𑌾𑌸𑌂𑌭𑌵𑌂 𑌸𑍇𑌵𑍇𑌤𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇 𑌪𑌰𑌾𑌶𑌰𑌃—

'𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑌰𑍍𑌧𑌪𑍍𑌰𑌹𑌰𑍇 𑌦𑍍𑌵𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍌 । 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌃 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋 𑌰𑍌𑌦𑍍𑌰𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑍇—

'𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯𑍇𑌷𑍍𑌟𑌂 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑌹𑌃𑌕𑍃𑌤𑍍𑌯𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇'𑌦𑌿𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍇—

'𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌸𑍍𑌤𑍁 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌯𑌾𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌶𑍌𑌨𑌕𑌃—

'𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌹𑌿𑌤𑌮𑍍 । 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌚𑍇'𑌤𑌿 ॥

களை அததற்கு உசிதமான காலத்தில் யதாசக்தி ஸேவிக்க வேண்டும் என்று பொருள் என்கிறார் விக்ஞானேச்வரர்.

மாதவீயவ்யாக்யானத்தில் பராசரர்:— ஸூர்யோதயத்திற்கு முன் கடைசி யாமத்தின் பாதியில் இரண்டு முஹூர்த்தங்களில் முதலாவது முஹூர்த்தம் ப்ராம்ஹம், இரண்டாவது முஹூர்த்தம் ரௌத்ரம் எனப்படுகிறது.

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:— விடியற்காலத்தில் எழுந்து, இஷ்டதெய்வத்தை மனதால் வணங்கி, வரும் பகலில் செய்ய வேண்டிய கார்யத்தைச் சிந்திக்கவேண்டும்.

ஸ்ம்ருதிபாஸ்கரத்தில்:— இராத்திரியின் கடைசி யாமத்தில் உள்ள ஒரு முஹூர்த்தம் ப்ராம்ஹமென்று சொல்லப்படுகிறது.

சௌனகர்:— ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து குரு, விஷ்ணு, மாதாபிதாக்கள் இவர்களை நமஸ்கரித்துத் தனக்கு ஹிதமான கார்யத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்.

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 —

'𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌮𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌨𑍃𑌪 । 𑌵𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌃 । 𑌅𑌪𑍀𑌡𑌯𑌾 𑌤𑌯𑍋𑌃 𑌕𑌾𑌮𑌮𑍁𑌭𑌯𑍋𑌃 𑌪𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇'𑌦𑌿𑌤𑌿 ।

𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 —

'𑌷𑍋𑌢𑌾 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌰𑌜𑌨𑍀𑌂 𑌚𑌰𑌮𑌾𑌂𑌶𑍇 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌿𑌤𑌃 । 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌹𑌰𑌿𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑍌 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇'𑌦𑌿𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑌤𑍍𑌨𑌾𑌵𑌲𑍍𑌯𑌾𑌂 —

'𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌿 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌸𑌾𑌧𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌉𑌤𑍍𑌥𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌞𑍍𑌚 𑌸𑌮𑌾𑌗𑌮𑌃 । 𑌜𑌾𑌗𑌰𑍂𑌕𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌪𑌿𑌤𑍃𑌸𑌂𑌮𑌾𑌨𑌨𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍 ॥ 𑌯 𑌏𑌵𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌤𑌥𑌾 । 𑌸𑌤𑌤𑌂

விஷ்ணுபுராணத்தில்:— ஓ அரசனே! நல்ல புத்தியுள்ளவன் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து விழித்துக்கொண்டு, தர்மத்தையும், அதற்கு விரோதமில்லாத அர்த்தத்தையும், அவ்விரண்டுக்கும் விரோதமில்லாத காமத்தையும் மனதால் சிந்திக்கவேண்டும்.

மற்றொரு ஸ்ம்ருதியில்:— இராத்திரியை ஆறாகப் பிரித்து, கடைசிப் பாகத்தில் விழித்துக்கொண்டு, பத்னியுடன் விஷ்ணுவை த்யானித்து, தர்மம் அர்த்தம் இவைகளையும் சிந்திக்க வேண்டும். இங்கு 'பத்னியாகிய லக்ஷ்மியுடன் கூடிய ஹரியை த்யானித்து' என்றும் பொருட்படுத்தலாம்.

ஸ்ம்ருதிரத்னவளியில்:—க்ருஹஸ்தன் விஷயத்தில் ஸ்வர்க்க ப்ராப்திகரமாய்ச் சிறந்த கர்மம் எதுசொல்லப் பட்டுள்ளதோ அதை முழுவதும், ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து நன்றாய்ச் சிந்திக்கவேண்டும். ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் தேவர்களும், பித்ருக்களும் சேர்ந்து வருகிறார்கள். ஆகையால் அப்பொழுது விழித்துக்கொள்ள வேண்டும். அது பித்ருக்களை

தேந கர்தவ்யோ ப்ராஹ்மே காலே ப்ரஜாகர: ॥ ப்ராஹ்மே முஹூர்தே ஸ்வபேதாம் ஶயநம் யத்ர தம்பதீ । ஶ்மஶாந துல்யம் தத்வேஶ்ம பித்ருபி: பரிவர்ஜ்யதே ॥ ப்ரத்யூஷ காலே நித்ராண: குருதே ஸர்வதா து ய: । அஶுசிம் தம் விஜாநீயாதநர்ஹம் ஸர்வகர்மஸு ॥ ப்ராஹ்மே முஹூர்தே யா நித்ரா ஸா புண்யக்ஷயகாரிணீ । தாம் கரோதி து யோ மோஹாத் பாதக்ருச்ச்ரேண ஶுத்த்யதீ’தி ॥

ப்ருஹந்மநு:—

சத்வாரீமாநி கர்மாணி ஸந்த்யாயாம் பரிவர்ஜயேத் ।
ஆஹாரம் மைதுநம் நித்ராம் ஸ்வாத்யாயஞ்ச ததைவ ச ॥
ஆஹாராஜ்ஜாயதே வ்யாதி: கர்பவ்யயஶ்ச மைதுநாத் । நித்ராதோ ஜாயதேऽலக்ஷ்மீ: ஸ்வாத்யாயாதாயுஷ: க்ஷய’ இதி ॥

(யும் தேவர்களையும்) மரியாதை செய்வதாகும். எவன் மோக்ஷத்தையும், யமனைப் பாராமலிருப்பதையும் வேண்டுகிருனே, அவன் பிரதிதினமும் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் விழித்திருக்கவேண்டும். எந்த க்ருஹத்தில் தம்பதிகள் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் படுக்கையிலிருக்கின்றுர்களோ, அந்த க்ருஹத்தைப் பித்ருக்கள் ச்மசானத்திற்குச் சமமாய்த் தள்ளிவிடுகிருர்கள். எவன் எப்பொழுதும் விடியற்காலத்தில் நித்திரை செய்கிருனே, அவனை அசுத்தனுகவும், ஸகலகர்மங்களிலும் யோக்யதை யற்றவனுகவும் அறிய வேண்டும். ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் செய்யப்படும் நித்திரை புண்யத்தை நாசப்படுத்துவதாகும். அறியாமையால் அக்காலத்தில் நித்திரை செய்பவன் பிராஜாபத்யக்ருச்ரத்தின் நாலிலொரு பாகமாகிய பாதக்ருச்ரம் அனுஷ்டித்தால் சுத்தனுகிருன்.

ப்ருஹன்மனு:— ஆஹாரம், ஸ்த்ரீஸங்கம், தூங்குதல், அத்யயனம் (வேதமோதல்) இந்நான்கு கார்யங்களையும் ஸந்த்யாகாலத்தில் வர்ஜிக்கவேண்டும். அக்காலத்தில் சாப்பிடுவதால் வ்யாதியும், ஸ்த்ரீஸங்கத்தால் கர்ப்பநாசமும், நித்திரையினுல் மூதேவியும், அத்யயனத்தால் ஆயுளின் நாசமும் உண்டாகிறது.

மநுரபி—

'தஞ்சேதப்யுதியாத்ஸூர்ய: ஶயாநம் காமகாரத: । நி
ம்லோசேத்வாऽப்யவிஜ்ஞாநாஜ்ஜபந்நுபவஸேத்திநம் ॥ ஸூ
ர்யேண ஹ்யபிநிம்ருக்தஶ்ஶயாநோऽப்யுதிதஶ்ச ய: । ப்ராய
ஶ்சித்தமகுர்வாணோ யுக்த: ஸ்யாந்மஹதைநஸேதி ॥ தஸ்மிந்
யஸ்மிந் கஸ்மிம்ஶ்சிதாஶ்ரமிணி ஶயாநே ஸதி ஸூர்யேணாऽபி
நிம்லோசேத் = அஸ்தமியாத் । அப்யநுஜ்ஞாநாத் = ஜ்ஞாத்வா உ
பேக்ஷணாத் । ஏவம்வசநாதஶக்த்யஜ்ஞாநாதிஷு ப்ராய
ஶ்சித்தாபாவஸ்ஸூசித:, அந்யதா து ப்ராயஶ்சித்தாகரணே
மஹாந் ப்ரத்யவாய இத்யர்த்த: ॥

ஆபஸ்தம்ப:—

'ஸ்வபந்நபிநிம்ருக்தோऽநாஶ்வாந் வாக்யதோ ராத்ரிமா
ஸீத ஶ்வோபூத உதகமுபஸ்ப்ருஶ்ய வாசம் விஸ்ருஜேத் ।
ஸ்வபந்நப்யுதிதோऽநாஶ்வாந் வாக்யதோऽஹஸ்திஷ்டேத் । இதி

மனுவும்:— எந்த ஆச்ரமியானாலும் அறிந்தே தூங்கும் பொழுது ஸூர்யன் உதிக்கின்றானோ, அல்லது அஸ்தமிக்கின்றானோ அவன் பகல் முழுவதும் காயத்ரியை ஜபிப்பவனாய் உபவாஸமிருக்கவேண்டும். ஸூர்யாஸ்தமயகாலத்தில் தூங்கும் அபிநிம்ருக்தனும், உதயகாலத்தில் தூங்கும் அப்யுதிதன் என்பவனும் முன் சொல்லிய பிராயச்சித்தம் செய்யாவிடில் மஹா பாபமுடையவனாவான். இது எல்லா ஆச்ரமிகளுக்கும் ஸமம். மனுவசனத்தில் 'காமகாரத:, அப்யனுஜ்ஞாநாத்' என்றிருப்பதால் அசக்தி, அறிவின்மை முதலிய காரணங்களாலேற்படும் விஷயத்தில் பிராயச்சித்தமில்லையென்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. சக்தியுள்ளவனுக்கும், ஜ்ஞானமுள்ளவனுக்கும் பிராயச்சித்தம் செய்துகொள்ளாவிடில் மஹாதோஷம் என்பது பொருள்.

ஆபஸ்தம்பர்:— ஸூர்யாஸ்தமயகாலத்தில் நித்திரை செய்பவன் 'அபிநிம்ருக்தன்' எனப்படுவான். அவன் இராத்திரி முழுவதும் உபவாஸத்துடன் மௌனியாய் உட்கார்ந்திருக்க

தோ: ப்ராணாயாமஶதேந ஶுத்த்யதி' இதி ॥ 'ஸூர்யேணாப்யுதித: ஶேதே ஸூர்யேணாபிநிர்முக்தஶ்சேதி ச । அம்ஶுமாலிநி நிம்லுக்தா ஹ்யுதிதஶ்ச யதாக்ரமம் ॥ அப்யுதிதநிம்ருக்தௌ அஸ்நாத்வா அஹர்ஜாத:, வாக்யத: தூஷ்ணீம்ஸ்திதோ ராத்ரிம் ஸமாஸீத । ந ஶயீத । அப்யாவர்தேத ப்ராத: ஸ்நாத்வா வாசம் விஸ்ருஜேத் ॥ அயமேவ நிவேஶ: ॥ ஆபஸ்தம்ப:= யாவதங்காநாம் ஶ்ராந்திர்பவதி, தாவத் ப்ராணாயாமம் குர்யாதி த்யேகே ப்ருவதே' இத்யாஹு: ॥ ஶக்த்யபேக்ஷோ விகல்ப: ॥

விஷ்ணு:—

'உத்தாயோத்தாய போத்தவ்யம் கிமத்ய ஸுக்ருதம் க்ருதம் । தத்தம் வா தாபிதம் வாபி வாக் ஸத்யா வாபி பாஷிதா ॥ உத்தாயோத்தாய போத்தவ்யம் மஹத்பயமுபஸ்திதம் । மரண வ்யாதிஶோகாநாம் கிமத்ய நிபதிஷ்யதீ'தி ॥

வ்யாஸ:—

'கிம் நு மே ஸ்யாதிதம் க்ருத்வா கிம் நு மே ஸ்யாதகுர்வ-

வேண்டும், படுக்கக்கூடாது. மறு நாள் காலையில் ஸ்நானம் செய்த பிறகு பேசவேண்டும். இது பிராயச்சித்தம். ஸூர்யோதயகாலத்தில் நித்திரைசெய்பவன் 'அப்யுதிதன்' எனப்படுவான். அவன் அன்று பகல் முழுவதும் உபவாஸத்துடன் மௌனியாய் நின்றுகொண்டிருக்கவேண்டும். 'அங்கங்களுக்கெல்லாம் சோர்வு உண்டாகும் வரை பிராணாயாமம் செய்ய வேண்டும்' எனச் சிலர் சொல்லுகின்றனர். இந்த இரண்டு பிராயச்சித்தங்களுள் ஒன்றை யனுஷ்டிக்கலாம் என்ற விகல்பம் சக்தியை அனுஸரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

விஷ்ணு:— ஒவ்வொரு நாளும் எழுந்தெழுந்து, சென்ற தினத்தில் என்ன நற்கார்யம் செய்தேன், என்ன தானம் செய்தேன், கொடுக்கச் செய்தேன், என்ன உண்மையான வார்த்தையைப் பேசினேன் என்று சிந்திக்கவேண்டும். எழுந்தெழுந்து மரணம், வியாதி, துக்கம் இவைகளுள் எந்த மஹாபயம் இப்பொழுது ஸமீபித்து வந்துவிடுமோ என்று சிந்திக்கவேண்டும்.

வ்யாஸர்.— புத்தியுள்ளவன் இக்கார்யத்தைச் செய்தால் என்ன பயனுண்டாகும், இக்கார்யத்தைச் செய்யாவிடில் என்ன

𑌤𑌃 । 𑌇𑌤𑌿 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌵𑌾 𑌨 𑌵𑍇𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌮𑍍—

'𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌆𑌚𑌰𑍇𑌤𑍍 । 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌂 𑌦𑌿𑌵𑌸𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣' 𑌇𑌤𑌿 ॥

---

* 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌜𑌪𑍍𑌯𑌾𑌨𑌿 ॥ *

𑌤𑌤𑍍𑌰 𑌜𑌪𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌹 𑌦𑌕𑍍𑌷𑌃—

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌮𑍁𑌰𑌾𑌰𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌰𑍀 𑌭𑌾𑌨𑍁𑌃 𑌶𑌶𑍀 𑌭𑍂𑌮𑌿𑌸𑍁𑌤𑍋 𑌬𑍁𑌧𑌶𑍍𑌚 । 𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌚 𑌶𑍁𑌕𑍍𑌰𑌃 𑌶𑌨𑌿𑌰𑌾𑌹𑍁𑌕𑍇𑌤𑌵𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥ 𑌭𑍃𑌗𑍁𑌰𑍍𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃 𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌶𑍍𑌚 𑌮𑌨𑍁𑌃 𑌪𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌯𑌃 𑌪𑍁𑌲𑌹𑌶𑍍𑌚 𑌗𑍌𑌤𑌮𑌃 । 𑌰𑍈𑌭𑍍𑌯𑍋 𑌮𑌰𑍀𑌚𑌿𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍋𑌽𑌥 𑌦𑌕𑍍𑌷𑌃 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥ 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌶𑍍𑌚 𑌸𑌨𑌨𑍍𑌦𑌨𑌶𑍍𑌚 𑌸𑌨𑌾𑌤𑌨𑍋𑌽𑌪𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌿𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑍌 𑌚 । 𑌸𑌪𑍍𑌤 𑌸𑍍𑌵𑌰𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌰𑌸𑌾𑌤𑌲𑌾𑌨𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥ 𑌸𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌕𑍁𑌲𑌾𑌚𑌲𑌾𑌶𑍍𑌚 𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑌯𑍋 𑌦𑍍𑌵𑍀𑌪𑌵𑌨𑌾𑌨𑌿 𑌸𑌪𑍍𑌤 ।

கெடுதியுண்டாகுமென்று ஆலோசித்துப் பலனுக்குத் தகுந்தபடி கார்யங்களைச் செய்யவேண்டும், செய்யாமலும் இருக்கவேண்டும்.

ஸ்ம்ருதிப்ரதீபிகையில்:— நற்கார்யமொன்றும் செய்யாமல் எந்தத் தினம் சென்றதோ அந்தத் தினத்தை வீணனதென்று அறியவேண்டும்.

விழித்த பிறகு ஜபிக்கவேண்டிய மந்திரங்கள்.

விடியற்காலத்தில் ஜபிக்கவேண்டியவைகளைச் சொல்லுகிறார் **தக்ஷர்:**— ப்ரம்மா, விஷ்ணு, சிவன், ஸூர்யன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்ரன், சனி, ராகு, கேது இவர்கள் எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்யவேண்டும். பிருகு, வஸிஷ்டர், கிரது, அங்கிரஸ், மனு, புலஸ்த்யர், புலஹர், கௌதமர், ரைப்யர், மரீசி, ச்யவனர்,

𑌭𑍂𑌰𑌾𑌦𑌿𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌸𑌪𑍍𑌤 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇
𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥ 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌸𑌗𑌨𑍍𑌧𑌾 𑌸𑌰𑌸𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌽𑌪𑌃
𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍀 𑌚 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌂 𑌚 𑌤𑍇𑌜𑌃 । 𑌨𑌭𑌃 𑌸𑌶𑌬𑍍𑌦𑌂 𑌮𑌹𑌤𑌾
𑌸𑌹𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌮 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌮𑍍 ॥ 𑌇𑌤𑍍𑌥𑌂
𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌠𑍇𑌤𑍍 𑌸𑍍𑌮𑌰𑍇𑌦𑍍𑌵𑌾 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾
𑌚𑍍𑌚 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 । 𑌦𑍁𑌃𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌨𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌹 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌂 𑌭𑌵𑍇𑌚𑍍𑌚
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑌤𑍍𑌨𑍇—

'𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌂 𑌗𑌾𑌞𑍍𑌚 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌕𑍇𑌶𑌵𑌞𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌯𑌮𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌦𑌨𑍁𑌂 𑌬𑌲𑌿𑌮𑍍 ।
𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑍍𑌮𑌰𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

தக்ஷர் இவர்கள் எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்யவேண்டும். ஸனத்குமாரர், ஸநந்தனர், ஸநாதனர், ஆஸுரி, ஸிம்ஹளர், ஏழு ஸ்வரங்கள், ஏழு கீழுலகங்கள் இவர்களும் எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்ய வேண்டும். 7-ஸமுத்ரங்கள், 7-குலபர்வதங்கள், 7-ருஷிகள், 7-தீவுகள், 7-வனங்கள், பூலோகம், ஆதிகூர்மம், 7-மேலுலகங்கள், இவைகளும் எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்யவேண்டும். கந்தகுணத்துடன் கூடிய பூமியும், ரஸத்துடன் கூடிய ஜலமும், ஸ்பர்சத்துடன் கூடிய வாயுவும், உருவத்துடன் கூடிய தேஜஸ்ஸும், சப்தத்துடன் கூடிய ஆகாசமும், மஹத்தத்துவத்துடன் கூடி எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் மஹாபரிசுத்தமான இந்த ஸ்தோத்ரத்தைக் காலையில் படித்தாலும், ஸ்மரித்தாலும், கேட்டாலும் துஷ்டஸ்வப்னபலன் நசிக்கும். நல்ல விடியற்காலமும், பகவத் ப்ரஸாதத்தால் நித்யமும் உண்டாகும்.

ஸ்ம்ருதிரத்னத்தில்:— மஹாபாரதத்தையும், பூமியையும், பசுவையும், ஸரஸ்வதியையும், பிராம்ஹணர்களையும், கேசவனையும் விடியற்காலத்திலெழுந்து உச்சரிக்கவேண்டும். ப்ரம்மா, சங்கரன், விஷ்ணு, யமன், ராமன், தனு, பலி இந்த ஏழு பேர்களையும் ப்ரதிதினமும் ஸ்மரிக்கவேண்டும். மஹாபாதகங்

𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌨𑌲𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 । 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑌾 𑌚 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀 𑌪𑍁𑌣𑍍𑌯𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥ 𑌕𑌾𑌰𑍍𑌕𑍋𑌟𑌕𑌸𑍍𑌯 𑌨𑌾𑌗𑌸𑍍𑌯 𑌦𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌲𑌸𑍍𑌯 𑌚 । 𑌋𑌤𑍁𑌪𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑍇𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌕𑌲𑌿𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 𑌇𑌤𑌿 ॥

𑌶𑌾𑌣𑍍𑌡𑌿𑌲𑍍𑌯𑌃—

𑌉𑌚𑍍𑌚𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑌰𑍇𑌣 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌸𑍍𑌤𑍋𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌨𑌨𑍍𑌯𑌧𑍀𑌃 । 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌮𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌚𑌰𑍇𑌦𑌿𑌤𑌿 ॥

---

* 𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌾𑌨𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌾𑌨𑌿 𑌚 ॥ *

𑌅𑌥 𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌾𑌨𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌃-

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌸𑍁𑌭𑌗𑌂 𑌗𑌾𑌞𑍍𑌚 𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌿𑌚𑌿𑌤𑌂 𑌤𑌥𑌾 । 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌾𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌸 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌂 𑌦𑍁𑌰𑍍𑌭𑌗𑌂 𑌮𑌤𑍍𑌤𑌂 𑌨𑌗𑍍𑌨𑌮𑍁𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌤𑌨𑌾𑌸𑌿𑌕𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌾

களும் நசிக்கும். நளனெனும் அரசனும், யுதிஷ்டிரனும், ஸீதாதேவியும், ஜனார்த்தனனும் புண்யச்லோகர்களெனப்படுகிறார்கள். (இவர்களின் கீர்த்தியைக் கேட்பதும் புண்யப்ரதமென்பதாம்.) கார்க்கோடகனெனும் நாகன், தமயந்தி, நளன், ருதுபர்ணனெனும் ராஜரிஷி இவர்களின் நாமத்தை உச்சரிப்பது கலியைப் போக்குவதாகும். (கலியென்பது பாபத்தையும், சண்டையையும், கலியுகத்தையும் சொல்லும்.)

சாண்டில்யர்:— எவன் விடியற்காலத்தில் ஸ்துதி செய்ய விரும்புகின்றானோ, அவன் உரத்த குரலுடன் வாஸுதேவன் முதலான தேவர்களின் நாமங்களை உச்சரிக்கவேண்டும்.

விடியற்காலத்தில் பார்க்கக் கூடியவையும், பார்க்கக் கூடாதவையும்.

பிறகு பார்க்கக்கூடியவைகளையும், பார்க்கக்கூடாதவைகளையும் தெரிவிக்கின்றார் **காத்யாயனர்**:— ச்ரோத்ரியன், அழகுடையவன், பசு, அக்நி, யாகம் செய்தவன் இவர்களை விடியற்காலத்தில் எழுந்து பார்ப்பவன் ஆபத்துக்களினின்றும் விடுபடுவான். பாவி, குரூபமுள்ளவன், நக்னன், மூக்கறுபட்டவன்

𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌲𑌹𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍' 𑌇𑌤𑌿 ॥
𑌨𑌗𑍍𑌨𑌤𑍍𑌵𑌂 𑌬𑌾𑌲𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥ 𑌅𑌥𑌵𑌾 — 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌸𑌂𑌵𑍃𑌤𑌿𑌃 𑌨𑍃𑌣𑌾𑌂, 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍌 '𑌨𑌗𑍍𑌨' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

---

* 𑌅𑌥 𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌿𑌹𑌾𑌰𑌃 ॥ *

𑌤𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

'𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌰𑌭𑍍𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌦𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍇𑌤𑌿 𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑍋 𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥
𑌤𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌂 𑌚𑍈𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 𑌦𑌿𑌶𑌮𑍍 ।
𑌉𑌦𑍀𑌚𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌤𑌰𑌾𑌂 𑌵𑌾 𑌶𑍌𑌚𑌾𑌚𑌾𑌰𑌕𑍍𑌷𑌮𑌾𑌂 𑌦𑌿𑌶𑌮𑍍 ॥ 𑌯𑌤𑍍𑌰𑍋𑌦𑌕𑌂 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌶𑍌𑌚𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌮𑌾𑌧𑌵𑍀𑌯𑍇—

'𑌨𑍈𑌰𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑌿𑌷𑍁𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌮𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌂 𑌭𑍁𑌵𑌃 ।
𑌦𑍂𑌰𑌾𑌦𑌾𑌵𑌸𑌥𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

இவர்களைக் காலையிலெழுந்தவுடன் பார்ப்பது கலஹத்திற்கு ஸூசகமாகும். நக்னன் என்ற பதம் வஸ்த்ரமில்லாதவனைச் சொல்லுகின்றது. ஆனல் குழந்தைகளைத்தவிர்த்து மற்றவர் விஷயமாய்ச் சொல்லவேண்டும். அல்லது வேதாத்யயனம் செய்யாதவனென்றும் நக்னபதத்திற்குப் பொருளுண்டு.

வெளியில் ஸஞ்சாரம்.

அது விஷயத்தில் **வ்யாஸர்**:— ஓ முனிவர்களே! நக்ஷத்ரங்களின் ஒளி இருக்கும் காலம் முதல் ஸூர்யோதயம் வரையிலுள்ள காலத்தைப் ப்ராதஸ்ஸந்த்யா என்று வேதங்கள் சொல்லுகின்றன. அதற்கு முன்பே எழுந்து கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளுள் சௌசாசாரத்திற்கு யோக்யமான திசையை நோக்கிச் செல்லவேண்டும். எந்த இடத்தில் ஜலம் அதிகமாயுள்ளதோ அந்த இடம் சென்று சௌசம் செய்துகொள்ளவேண்டும்.

மாதவீயத்தில்:— தென்மேற்குத் திக்கில் அம்புவிழும் தூரம், அல்லது அதிகமான ப்ரதேசத்தைக் கடந்துசென்று

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

‘𑌆𑌰𑌾𑌚𑍍𑌚𑌾𑌵𑌸𑌥𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌿𑌶𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑌰𑌾𑌂 𑌵𑍇’𑌤𑌿 ॥ 𑌗𑌚𑍍𑌛𑍇𑌦𑌿𑌤𑌿 𑌶𑍇𑌷𑌃 । 𑌆𑌰𑌾𑌤𑍍 = 𑌦𑍂𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

‘𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇𑌨 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑍇𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌶𑌰𑌸𑍍𑌯 । 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌸𑍍𑌵𑌶𑌿𑌰𑍋𑌽𑌵𑌗𑍁𑌣𑍍𑌠𑍍𑌯 𑌨 𑌚 𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌜𑍍𑌜𑌾𑌤𑍁 𑌶𑌿𑌰𑌃 𑌕𑌰𑍇𑌣’ 𑌇𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑍍𑌰𑌯𑌃 = 𑌗𑍃𑌹𑌮𑍍 ॥

𑌮𑌨𑍁𑌃—

‘𑌦𑍂𑌰𑌾𑌦𑌾𑌵𑌸𑌥𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌦𑍂𑌰𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌵𑌸𑍇𑌚𑌨𑌮𑍍 । 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌂 𑌨𑌿𑌷𑍇𑌕𑌂 𑌚 𑌦𑍂𑌰𑌾𑌦𑍇𑌵 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇’𑌦𑌿𑌤𑌿 ॥ 𑌇𑌦𑌂 𑌦𑌿𑌵𑌾𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 । 𑌅𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌚 𑌬𑌹𑌿𑌰𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌦𑍂𑌰𑌾𑌦𑌾𑌵𑌸𑌥𑌾𑌦𑍍𑌵𑌾 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌯𑍋𑌃 𑌕𑌰𑌣𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । ‘𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌤𑍁 𑌗𑍃𑌹𑌾𑌭𑍍𑌯𑌾𑌶𑍇 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥

வீட்டிற்குத் தூரமான ஸ்தலத்தில் மூத்ரம், மலம் இவைகளை விடவேண்டும்.

ஆபஸ்தம்பர்:— தெற்கு, அல்லது தென்மேற்குத் திக்கில் சென்று, வீட்டிற்கு வெகுதூரத்தில் மல மூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

வ்யாஸர்:— வீட்டிற்குத் தென்மேற்குத் திக்கில் அம்பு விழும் தூரத்தளவு சென்று தலையை வஸ்த்ரத்தால் மறைத்துக் கொண்டு, மலவிஸர்ஜனம் செய்யவேண்டும். தலையைக் கையினால் தொடக்கூடாது.

மனு:— மூத்ரம், கால் கழுவிய ஜலம், எச்சிலன்னம், ரேதஸ் இவைகளை வீட்டிற்கு வெளியில் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும்.

இது பகல் விஷயம். ஸூர்யாஸ்தமயத்திற்குப் பின் க்ராமத்திற்கோ, வீட்டிற்கோ வெகுதூரத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்பதில்லை. ஸமீபத்திலும் செய்ய

𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃—

‘𑌉𑌤𑍍𑌥𑌾𑌯 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌯𑌾𑌮𑍇 𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌰𑌾𑌚𑌮𑍍𑌯 𑌵𑌾𑌗𑍍𑌯𑌤𑌃 । 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌯 𑌤𑍃𑌣𑍈𑌰𑍍𑌭𑍂𑌮𑌿𑌂 𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌵𑌾𑌸𑌸𑌾 ॥ 𑌵𑌾𑌚𑌂 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌷𑍍𑌠𑍀𑌵𑌨𑍋𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 । 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌤𑍁 𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃’ 𑌇𑌤𑌿 ॥ 𑌅𑌨𑍇𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌾𑌪𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌨𑌾𑌚𑌮𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌤𑍍𑌰𑌾𑌚𑌮𑌯𑍍𑌯𑍈𑌵 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥ 𑌤𑍃𑌣𑌾𑌨𑌿 = 𑌅𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌾𑌨𑌿 ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌃—

‘𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤 𑌶𑌕𑍃𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 । 𑌅𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑍈𑌰𑌨𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌤𑍃𑌣𑍈𑌰𑌾𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌮𑍍’ 𑌇𑌤𑌿 ॥ 𑌤𑍃𑌣𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌦𑍇𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 ॥

லாம். “ராத்திரியில் வீட்டிற்கு ஸமீபத்திலும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யலாம்” என்று ஸ்ம்ருதியிருப்பதால்.

அங்கிரஸ்:— ராத்திரியின் கடைசி யாமத்தில் எழுந்து கவனமுடையவனாய் ஆசமனம் செய்து, புல்லுகளால் பூமியை மறைத்து, வஸ்த்ரத்தால் தலையை மறைத்து, மௌனத்துடன், துப்புதல், பெருமூச்சுவிடுதல் இவைகளில்லாமல், சுத்தமான இடத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். இங்கு ஆசமனம் செய்து என்றிருப்பதால் நித்திரையைப்போல் வேறு ஆசமன நிமித்தம் நேர்ந்தால் ஆசமனம் செய்தபிறகே மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்று சொல்லியதாயாகிறது. பூமியை மறைக்கும் புல்கள் யாகத்திற்கு அர்ஹமில்லாதவைகளாயிருக்கவேண்டும்.

அவ்விதமே விதிக்கின்றார் காத்யாயனர்:— தலையை மறைத்துக்கொண்டு, யாகத்திற்கு யோக்யமல்லாததும், உலர்ந்ததுமான த்ருணங்களால் பூமியை மறைத்து, மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். இங்கு த்ருணம் என்னும் பதம் கட்டை முதலியவைவையும் காட்டுவதற்காகும். ஆகையாலேதான்,

அத்ர மனு:—

'திரஸ்க்ருத்யோச்சரேத்காஷ்டம் லோஷ்டம் பத்ரம் த்ருணானி வா । நியம்ய ப்ரயதோ வாசம் ஸம்வீதாங்கோऽவகுண்டித' இதி ॥ திரஸ்கரணம் = அந்தர்தானம் । உச்சார: = புரீஷோத்ஸர்க: । இதம் மூத்ரஸ்யாப்யுபலக்ஷணமேதத், 'அயஜ்ஞியைரநார்த்ரைஶ்ச த்ருணை: ஸஞ்சாத்ய மேதினீம் । ப்ராணாஸ்யம் வாஸஸாऽऽவேஷ்ட்ய விண்மூத்ரம் த்யஜேத்புத' இதி ஸ்மரணாத் ॥ ஸம்வீதாங்க: = ப்ராவ்ருததேஹ: । அவகுண்டித: = ப்ராவ்ருதஶிரா: ॥

அத்ர விஷ்ணு:—

'அநார்த்ரேண ஸ்வவாஸஸா வேஷ்டயித்வா விண்மூத்ரஸர்ஜனம் க்ரீவாயாம் விஸஜ்யோபவீதே' திதி ॥

ஹாரீத:—

'அப்ராவ்ருதஶிரா யஸ்து விண்மூத்ரம் ஸ்ருஜதி த்விஜ: ।
தச்சிரஶ்ஶததா பூயாதிதி தேவாஶ்ஶபந்தி த' மிதி ॥

மனு:— சுத்தனும், மௌனியாயும், அங்கங்களையும் தலையையும் வஸ்த்ரத்தால் மறைத்துக்கொண்டு, கட்டை, மண் கட்டி, இலை, புல் இவைகளிலொன்றினால் பூமியை மறைத்து மலவிஸர்ஜனம் செய்யவேண்டும். இங்குள்ள 'உச்சரேத்' என்ற பதம் மூத்ர விஸர்ஜனத்தையும் சொல்லும். 'யக்ஞார்ஹமல்லாததும், உலர்ந்ததுமான புல்களால் பூமியை மறைத்து, மூக்கையும் வாயையும் வஸ்த்ரத்தால் மறைத்து, மலமூத்ரங்களை விடவேண்டும்' என்ற ஸ்ம்ருதியிருப்பதால்.

இங்கு விஷ்ணு:— ஈரமில்லாத தன் வஸ்த்ரத்தினால் தலையை மறைத்துக்கொண்டு உபவீதத்தைக் கழுத்தில் சேர்த்து மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

ஹாரீதர்:— ப்ராம்ஹணன் தலையை வஸ்த்ரத்தால் மறைத்துக்கொள்ளாமல் மலமூத்ர விஸர்ஜனம் செய்தால் அவன் தலை பல துண்டுகளாய்ப் போகவேண்டுமென்று தேவர்கள் அவனைச் சபிக்கின்றனர்.

போதாயந:—

'ஶுஷ்கத்ருணமயாஜ்ஞிகம் காஷ்டம் லோஷ்டம் வா திரஸ்க்ருத்யாஹோராத்ரயோருதக்தக்ஷிணாமுக: ப்ராவ்ருத்ய ஶிர உச்சரேந்மேஹேத்வே'தி ॥

மநு:—

'மூத்ரோச்சாரஸமுத்ஸர்கம் திவா குர்யாதுதங்முக:। தக்ஷிணாபிமுகோ ராத்ரௌ ஸந்த்யயோஶ்ச யதா திவா ॥ சாயாயாமந்தகாரே வா ராத்ராவஹநி வா த்விஜ:। யதாஸுகமுக: குர்யாத் ப்ராணபாதபயேஷு ச' இதி ॥ 'சாயாயாம் மூத்ரபுரீஷயோ: கர்ம வர்ஜயே'திதி ஸ்மரணாத், அத்ர சாயாஶப்தேந அவர்ஜநீயோ மேகபர்வதாதிநா ஸூர்யஸ்ய திரோபாவோ விவக்ஷித:। அந்தகாரஶப்தேந ராத்ரௌ ஜ்யோதிஷாம் ॥

யத்து தேவலேநோக்தம்—

'ஸதைவோதங்முக: ப்ராதஸ்ஸாயாஹ்நே தக்ஷிணாமு

போதாயனர்:— யாகார்ஹமல்லாத உலர்ந்த புல், கட்டை, மண்கட்டி இவைகளிலொன்றினுல் பூமியை மறைத்து, தலையை மூடிக்கொண்டு பகலில் வடக்குமுகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

மனு:- பகலில் வடக்குமுகமாகவும், ராத்திரியில் தெற்கு முகமாகவும், இரண்டு ஸந்த்யாகாலங்களிலும் பகலில் போலவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். நிழல், அந்தகாரம் இவைகளிலும் ப்ராணபயம் வரக்கூடிய இடங்களிலும், பகல் ராத்திரியென்ற நியமமில்லாமல் இஷ்டப்படி இருந்து செய்யலாம். திக்குநியமமில்லை. 'நிழலில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடா'தென்று ஸ்ம்ருதியிருப்பதால் இங்கு நிழல் என்ற பதத்தால், நம்மால் பரிஹரிக்க முடியாததாய் மேகம் பர்வதம் முதலியவைகளால் ஏற்படும் ஸூர்யனின் மறைவு சொல்லப்படுகிறது. அந்தகாரம் என்பதால் ராத்திரியில் நக்ஷத்ரங்களின் மறைவும் சொல்லப்படுகிறது.

"எப்பொழுதுமே காலையில் வடக்குமுகமாகவும் மாலையில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

வ: । விண்மூத்ரோத்ஸர்ஜனம் ஸந்த்யாஸு பரிவர்ஜயே'திதி, தந்நிருத்தேதரவிஷயம், 'நோபருத்த: க்ரியா: குர்யா'திதி ஸ்மரணாத் ॥

ஸ்ம்ருதிஸாரே—

'குர்யாத் ராக்ஷஸீமாசாம் நிவீதீ வாக்யதோ திவா ।
விண்மூத்ரோத்ஸர்ஜனம் கார்யம் ப்ருதக்சிரஸ்து உதங்முக: ॥
ஸந்த்யயோஸ்து ததா ராத்ரௌ தக்ஷிணாபிமுகோ த்விஜ' இதி ॥

யத்து— 'ப்ரத்யங்முகஸ்து பூர்வாஹ்ணே அபராஹ்ணே ப்ராங்முகஸ்ததா । உதங்முகஸ்து மத்யாஹ்னே நிசாயாம் தக்ஷிணாமுக' இதி யமவசநம், தத் ஸூர்யாபிமுகத்வநிஷேதபரமிதி மாதவீயே ॥

யாஜ்ஞவல்க்ய:—

'திவா ஸந்த்யாஸு கர்ணஸ்தப்ரஹ்மஸூத்ர உதங்முக

ஸந்த்யா காலங்களில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது'' என்று தேவலர் சொல்லியிருக்கிறாரெனில், அது அடக்கப் பட்ட மலமூத்ரங்களைத் தவிர்த்தவைகளின் விஷயம். 'மல மூத்ரங்களை அடக்கிக்கொண்டு, க்ரியைகளைச் செய்யக் கூடாது' என்று ஸ்ம்ருதி இருப்பதால், ஆகையால் மனுவசன விரோதமில்லை.

ஸ்ம்ருதிஸாரத்தில்:— நிருருதி திக்கிற்சென்று நிவீதியா யும், மௌனியாயும், சிச்னத்தைப் பிடித்துக்கொண்டு பகலில் வடக்கு முகமாகவும், ஸந்த்யா காலத்திலும் ராத்திரியிலும் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

முற்பகலில் மேற்கு முகமாயும், பிற்பகலில் கிழக்கு முக மாயும், நடுப்பகலில் வடக்கு முகமாயும், இரவில் தெற்கு முக மாயும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்ற யம வசனம், ஸூர்யாபிமுகமாயிருந்து செய்வதை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளது என்று மாதவீயத்தில் சொல்லப்பட்டிருக் கிறது.

யாக்ஞவல்க்யர்:— பகலிலும், ஸந்த்யா காலங்களிலும், காதில் பூணூலைத் தரித்து வடக்குமுகமாயும், ராத்திரியில் தெற்குமுகமாயும் மலமூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும்.

वः । कुर्यान्मूत्रपुरीषे तु रात्रौ चेद्दक्षिणामुखः' इति ॥

आपस्तम्बः—

प्राङ्मुखोऽन्नानि भुञ्जीत उच्चरेद्दक्षिणामुखः । उदङ्मुखो मूत्रं कुर्यात् प्रत्यक्पादावनेजनम्' इति॥ अत्र विकल्पो वेदितव्यः ॥

अङ्गिराः—

'कृत्वा यज्ञोपवीतं तु पृष्ठतः कण्ठलम्बितम् । विण्मूत्रं तु गृही कुर्याद्यद्वा कर्णे समाहितः' इति॥

आपस्तम्बोऽपि—

'नोर्ध्वं नाधो न तिर्यक्च किञ्चिदीक्षेत बुद्धिमान् । नभो भूम्यन्तरं पश्येत् कृत्वा शिरस्युपवीतकम्' इति ॥

स्मृत्यन्तरेऽपि—

'सूत्रं तु दक्षिणे कर्णे कृत्वा विण्मूत्रमुत्सृजेत्' इति ॥

ஆபஸ்தம்பர்:— கிழக்குமுகமாய்ப் போஜனம் செய்ய வேண்டும். தெற்குமுகமாய் மலவிஸர்ஜனம் செய்யவேண்டும். வடக்குமுகமாய் மூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும். மேற்கு முகமாய்க் காலலம்பவேண்டும். இதில் விகல்பமென்று அறிய வேண்டும்.

அங்கிரஸ்:— பூணூலை நிவீதமாய்க் கழுத்திலிருந்து முதுகில் தொங்கும்படி செய்து, அல்லது காதில் தரித்து, மலமூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும்.

ஆபஸ்தம்பரும்:— புத்தியுள்ளவன் உயரவும், கீழேயும், குறுக்கிலும் ஒன்றையும் பார்க்கக்கூடாது. ஆகாசம், பூமி இவைகளின் நடுவையே பார்க்கவேண்டும். பூணூலைத் தலையில் தரிக்கவேண்டும்.

வேறொருஸ்ம்ருதியில்:- உபவீதத்தை வலதுகாதில் தரித்துக்கொண்டு மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃—

"𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍁 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌵𑍈 । 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌤𑍁 𑌶𑍁𑌚𑍌 𑌦𑍇𑌶𑍇 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃" 𑌇𑌤𑌿 ॥ 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌕𑌰𑍍𑌣𑌨𑌿𑌯𑌮𑌨𑌮𑍇𑌕𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

𑌯𑌥𑌾𑌹 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌃—

"𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑍋𑌪𑌵𑍀𑌤𑌕𑌮𑍍 । 𑌮𑍂𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌂 𑌬𑍁𑌧𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌯𑌨𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑌿𑌤𑌿 ॥

𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌯𑌨𑌗𑍃𑌹𑍍𑌯𑍇𑌽𑌪𑌿—

"𑌯𑌦𑍍𑌯𑍇𑌕𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌾𑌰𑍇—

"𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌽𑌵𑌗𑍁𑌣𑍍𑌠𑌨𑌂 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰 𑌉𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑍇𑌣 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌵𑌾 । 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍇𑌦𑌿𑌤𑌿 ॥ 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂= 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌮𑍍 ॥

அங்கிரஸ் :— கவனமுள்ளவனுய், உபவீதத்தை வலது காதில் வைத்துக்கொண்டு, சுத்தமான இடத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

வலது காதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது ஒரே வஸ்த்ரம் தரித்திருப்பவனைப் பற்றியதாம். ஏனெனில், **ஸாங்க்யாயனர்**–'க்ருஹஸ்தனான ப்ராம்ஹணன் ஒரே வஸ்த்ரமுடையவனுயிருந்தால், உபவீதத்தை காதில் வைத்துக்கொண்டு மூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்று ஸாங்க்யாயனர் சொன்னூர்' என்று சொல்வதால்.

ஸாங்க்யாயனக்ருஹ்யத்திலும் :— ஒரே வஸ்த்ரத்துடனிருப்பானுகில் யக்ஞோபவீதத்தை காதில் வைத்துக்கொண்டு மலமூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும்.

ஸ்ம்ருதி ஸாரத்தில் :— உத்தரீயவஸ்த்ரத்தால் போற்றிக்கொண்டு, பவித்ரத்தை வலது காதில் வைத்துக்கொண்டு, மல மூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும். இங்கு பவித்ரமென்ற பதத்திற்கு பூணூல் என்று பொருள்.

ததா ச பரத்வாஜ:—

'சண்டாலைரந்த்யஜைஸ்ஸார்தம் ஸம்பாஷே மூத்ரவிமோசநே । தக்ஷிணஶ்ரவணே விப்ரோ ப்ரஹ்மஸூத்ரம் விநிக்ஷிபேத்' இதி ॥

மூத்ரபுரீஷாதிகாரே ஶங்க:—

'நாநுதகோ நாம்ருத்திகோ நாவஸ்த்ரவேஷ்டிதஶிரா' இதி ॥

ஸ்ம்ருதிதீபிகாயாம்—

'உத்ருதோதகமாதாய ம்ருத்திகாம் சைவ வாக்யத: । உதங்முகோ திவா குர்யாத் ராத்ரௌ சேத்தக்ஷிணாமுக: ॥ ப்ராகேவ மூத்ரபுரீஷஸ்ய பஶ்சாத் க்ருஹ்ணீத ம்ருத்திகாம் । பஶ்சாத்க்ருஹ்ணாதி யோ விப்ர: ஸசேலோ ஜலமாவிஶேத்' இதி ॥

பைடீநஸி:—

'அநுதகமூத்ரபுரீஷகரணே ஸசேலஸ்நாநம்' இதி ॥

அப்படியே பரத்வாஜர் :— சண்டாளருடனும், அந்த்யஜருடனும் பேசும்பொழுதும், மலமூத்ர விஸர்ஜன காலத்திலும் ப்ராம்ஹணன் பூணூலை வலது காதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மலமூத்ரத்யாகப்ரகரணத்தில், சங்கர் :- சௌசத்திற்குறிய ஜலம், மண் இவைகளை எடுத்து வைத்துக்கொள்ளாமலும், தலையில் வஸ்த்ரத்தைச் சுற்றிக்கொள்ளாமலும் மலமூத்ரங்களை விடக்கூடாது.

ஸ்ம்ருதிதீபிகையில் :- ஜலத்தையும், ம்ருத்திகையையும் எடுத்துவைத்துவிட்டு, மௌனியாய், பகலில் வடக்குமுகமாகவும், இரவில் தெற்குமுகமாகவும் மலமூத்ர விஸர்கம் செய்ய வேண்டும். ப்ராம்ஹணன் மலமூத்ர விஸர்கத்திற்கு முந்தியே மண்ணை எடுத்து வைக்கவேண்டும். பிந்தி எடுத்தால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டும். கட்டிய வஸ்த்ரத்துடனே ஸ்நானம் செய்வது ஸசேலஸ்நானம்.

பைடீநஸி :— ஜலத்தை எடுத்துக்கொள்ளாமல் மலமூத்ர விஸர்ஜனம் செய்தால் ஸசேலஸ்நானம் செய்யவேண்டும்.

பைடீநஸி:—

'உத்3த்4ருʼத்யைவ ஜலம் பூர்வம் மூத்ரபுரீஷே ॥ க்3ருʼஹீதோத3கபாத்ரஶ்சேன்மூத்ரபுரீஷே । தத்தோயம் மூத்ரதுல்யம் ஸ்யாத் பீத்வா சாந்த்3ராயணஞ்சரேத் ॥ கரஸ்தோ2த3கபாத்ரஶ்சேத் மூத்ரபுரீஷே । தஜ்ஜலம் மூத்ரஸத்3ருʼஶம் ஸுராபானேன தத்ஸமம்'இதி ॥

ப4ரத்3வாஜ:—

'ஶக்ருʼன்மூத்ரம் த்யஜேத்3யஸ்து விஸ்ம்ருʼத்யைவோபவீதயஸ் । தத்ஸூத்ரம் து பரித்யஜ்ய த3த்4யாத3ன்யன்னவம்' இதி ॥

அங்கி3ரா:—

'க்ருʼத்வா மூத்ரம் புரீஷம் வா யதா3 நைவோத3கம் ப4வேத் । ஸ்நாத்வா(அ)ப்3யோத3கை: பஶ்சாத் ஸசேலம் து விஶுத்4யதி ॥ ஸ்நாநம் க்ருʼத்வா ஸசேலம் து விஶுத்3தோ4 கா-ரயேத் । ப்ராணாயாமத்ரயம் க்ருʼத்வா பானஸ்நானேந

பைடீநஸியே :— ஜலத்தை முந்தி எடுத்துக்கொண்ட பிறகே மூத்ர புரீஷவிஸர்கம் செய்யவேண்டும். ஜலபாத்ரத்தைத் தொட்டுக்கொண்டு விஸர்ஜனம் செய்தால், அந்த ஜலம் மூத்ரத்திற்குச் சமமாகும். அதைப் பானம் செய்தால் சாந்த்ராயணமனுஷ்டிக்கவேண்டும். ஜலபாத்ரத்தைக் கையில் வைத்துக் கொண்டு விஸர்ஜனம் செய்தாலும் அந்த ஜலம் மூத்ரஸமமாகும். அதைக் குடிப்பது ஸுராபானஸமமாகும்.

பரத்வாஜர் :- மறதியால் பூணூலை நிவீதம் செய்துகொள்ளாமல் உபவீதியாகவே மலமூத்ரத்யாகம் செய்தவன் அந்தப் பூணூலை விட்டுவிட்டுப் புதிதான பூணூலைத் தரித்துக்கொள்ள வேண்டும்.

அங்கிரஸ் :— முதலில் ஜலமே கிடைக்காவிடில், மலமூத்ர விஸர்கம் செய்த பிறகு, ஜலம் கிடைத்தவிடத்தில் சௌசாதிகளைச் செய்துகொண்டு, ஸசேலஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான்.

𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑍈𑌲𑌾𑌭𑍍𑌯𑌙𑍍𑌗𑍇 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌨𑍍𑌤𑍇 𑌕𑍍𑌷𑍌𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌮𑍈𑌥𑍁𑌨𑍇 । 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍌𑌚𑌮𑌨𑌾𑌚𑌮𑍍𑌯 𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌦𑌿𑌤𑌿 ॥

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

'𑌶𑌿𑌰𑌃𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌨𑌿𑌵𑍀𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌦𑌿𑌶𑌾𑌮𑌵𑌲𑍋𑌕𑌨𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌤𑍃𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌮𑍌𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌷𑌷𑍍𑌠𑌂 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑌂 𑌶𑍌𑌚𑌮𑌷𑍍𑌟𑌮𑌮𑍍' 𑌇𑌤𑌿 । 𑌪𑍁𑌰𑍀𑌷𑌕𑌰𑌣𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑍋𑌦𑌕𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌿𑌦𑌂 𑌨 𑌭𑍂𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍—'𑌸𑌜𑌲𑌂 𑌭𑌾𑌜𑌨𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌂 𑌚 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 । 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌚 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥

ஸ்நானம் செய்த பிறகு ஈரவஸ்த்ரத்துடனேயே மலமூத்ர விஸர்கம் செய்தால், மூன்று ப்ராணாயாமங்கள் செய்து, மறுபடி ஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான். எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், வாந்தி, க்ஷௌரம், ஸ்த்ரீஸங்கம் இவைகளில் அததற்குரிய சுத்தியைச் செய்து ஆசமனம் செய்யாமல் மூத்ர புரீஷ விஸர்கம் செய்பவன் மூன்று நாள் அசுத்தனாகிறான்.

ஆபஸ்தம்பர்:—தலையை வஸ்த்ரத்தால் சுற்றுவது முதலாவது, பூணூலை நிவீதம் செய்துகொள்வது இரண்டாவது, நான்கு திக்குகளையும் பார்ப்பது மூன்றாவது, புல் முதலியவற்றால் பூமியை மறைத்தல் நான்காவது, மௌனம் ஐந்தாவது, விஸர்ஜனம் ஆறாவது, மண்ணை எடுப்பது ஏழாவது, ஜலத்தை எடுப்பது எட்டாவது. இந்த வசனத்தில் மல விஸர்ஜனத்திற்குப் பிறகு மண் ஜலமிவைகளை க்ரஹிப்பதைச் சொல்லியிருப்பது பூமியிலேயே இருக்கும் ஜலத்தில் செய்யப்படும் சௌசத்தின் விஷயமாகும். ஏனெனில் "ஜலத்துடனுள்ள பாத்ரத்தையும், சோதிக்கப்பட்ட மண்ணையும் வைத்துவிட்டு மலமூத்ர விஸர்கம் செய்யவேண்டும், வேறுவிதமானால் சுத்தனாவதில்லை" என்று வ்யாஸர் சொல்லியிருப்பதால்.

மநு:—

'ந மூத்ரம் பதி குர்வீத ந பஸ்மனி ந கோவ்ரஜே । வாய்வக்னிவிப்ரமாதித்யமப: பஶ்யம்ஸ்ததைவ காம் ॥ ந கதாசன குர்வீத விண்மூத்ரஸ்ய விஸர்ஜனம் । ந பாலக்ருஷ்டே ந ஜலே ந சித்யாம் ந ச பர்வதே ॥ ந ஜீர்ணதேவாயதனே ந வல்மீகே கதாசன । ந ஸஸத்வேஷு கர்த்தேஷு ந கச்சன்னபி ச ஸ்தித: ॥ ந நதீதீரமாஸாத்ய ந ச பர்வதமஸ்தகே ॥ ப்ரத்யக்னிம் ப்ரதிஸூர்யம் ச ப்ரதிஸோமோதகத்விஜம் । ப்ரதிகு ப்ரதிவாதம் ச ப்ரஜ்ஞா நஶ்யதி மேஹத:' இதி ॥

யம:—

'ப்ரத்யாதித்யம் ந மேஹேத ந பஶ்யேதாத்மனஶ்ஶக்ருத் । த்ருஷ்ட்வா ஸூர்யம் நிரீக்ஷேத காமக்னிம் ப்ராஹ்மணம் ததா'இதி ॥

விஷ்ணு:—

'ந ப்ரத்யநிலாநலேந்த்வர்கஸ்த்ரீகுருப்ராஹ்மணா'நிதி ॥

மனு:— வழியிலும், சாம்பலிலும், பசுக்கொட்டிலிலும், வாயு, அக்னி, ப்ராம்ஹணன், ஸூர்யன், ஜலம், பசு இவர்களைப் பார்த்துக்கொண்டும், கலப்பையால் உழுத பூமியிலும், ஜலத்திலும், சிதியிலும், (ஆஹிதாக்னிகளால் சயனத்தில் செங்கற்களால் மந்த்ரத்துடன் கட்டப்படும் மேடை 'சிதி' என ப்படும்) மலையிலும், ஜீர்ணமான தேவாலயத்திலும், புற்றிலும், ப்ராணிகள் வஸிக்கும் வளைகளிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும், நதியின் கரையிலும், மலையின் உச்சியிலும், மலமூத்ரவிஸர்ஜனம் செய்யக்கூடாது. அக்னி, ஸூர்யன், சந்த்ரன், ஜலம், ப்ராம்ஹணன், பசு, காற்று இவர்களுக்கு எதிராயிருந்து கொண்டு மலமூத்ர விஸர்ஜனம் செய்பவனுக்கு புத்தி குறைந்துவிடும்.

யமன்:— ஸூர்யனுக்கு எதிராய் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. தன்னுடைய மலத்தைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் ஸூர்யனைப் பார்க்கவேண்டும், அல்லது பசு, அக்னி, ப்ராம்ஹணன் இவர்களையாவது பார்க்கவேண்டும்.

விஷ்ணு :— காற்று, அக்னி, சந்த்ரன், ஸூர்யன், ஸ்த்ரீ,

𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌃—

'𑌫𑌾𑌲𑌕𑍃𑌷𑍍𑌟𑍇 𑌜𑌲𑍇 𑌚𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑍇 𑌗𑌿𑌰𑌿𑌮𑌸𑍍𑌤𑌕𑍇 । 𑌦𑍇𑌵𑌾𑌯𑌤𑌨𑍇 𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌦𑌰𑍍𑌭𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌶𑌾𑌦𑍍𑌵𑌲𑍇 ॥ 𑌛𑌾𑌯𑌾𑌯𑌾𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑍇 𑌵𑌾 𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑍇 𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 । 𑌨𑌾𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌶𑍍𑌶𑌿𑌰𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌨𑍍𑌨 𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌚𑍍𑌚 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌶𑌿𑌰𑌃 ॥ 𑌨 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌨 𑌦𑌿𑌶𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌵𑌿𑌣𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌜𑌨𑍇 𑌬𑍁𑌧𑌃' 𑌇𑌤𑌿 ॥

𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍇—

'𑌕𑍃𑌶𑌾𑌨𑍌 𑌗𑌚𑍍𑌛𑌂𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌂𑌶𑍍𑌚 𑌰𑌥𑍍𑌯𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌕𑍇 । 𑌅𑌙𑍍𑌗𑌾𑌰𑍇 𑌗𑍋𑌮𑌯𑍇 𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌭𑍂𑌮𑌿𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥ 𑌬𑌿𑌲𑍇 𑌜𑌲𑍇 𑌚𑌿𑌤𑌾𑌯𑌾𑌂𑌚 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑍇 𑌗𑌿𑌰𑌿𑌮𑌸𑍍𑌤𑌕𑍇 । 𑌦𑍇𑌵𑌾𑌯𑌤𑌨𑍇 𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌦𑌰𑍍𑌭𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑍁𑌶𑌸𑍍𑌥𑌲𑍇 । 𑌸𑍇𑌵𑍍𑌯𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑍁 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇𑌷𑍁 𑌮𑌾𑌰𑍍𑌗𑌗𑍋𑌷𑍍𑌠𑌾𑌮𑍍𑌬𑍁𑌭𑌸𑍍𑌮𑌸𑍁 । 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍍𑌵𑍇𑌤𑍇

குரு, ப்ராம்ஹணன், இவர்களுக்கு எதிராயிருந்துகொண்டு மலமூத்ர விஸர்கம் செய்யக்கூடாது.

போதாயனர் :— கலப்பையாலுழுத ஸ்தலத்திலும், ஜலத்திலும், சிதியிலும், புற்றிலும், மலையினுச்சியிலும், தேவாலயத்திலும், நதியின் கரையிலும், தர்ப்பத்தின் மேலும், புல்லுள்ள தரையிலும், நிழலிலும், மரத்தினடியிலும் மலமூத்ர விஸர்ஜனம் கூடாது. மலமூத்ரவிஸர்ஜன காலத்தில் வேறு விஷயத்தில் கவனமாய் வெகுகாலமிருக்கக்கூடாது. கையால் தலையைத் தொடக்கூடாது. பேசக்கூடாது. திக்குகளைப் பார்க்கக்கூடாது.

பாரிஜாதத்தில் :— அக்னியிலும், நடந்துகொண்டும், நின்றுகொண்டும், வீதியிலும், நதியின் துறையிலும், ச்மசானத்திலும், தணலிலும், சாணத்திலும், நதியிலும், யாக பூமியிலும், வளையிலும், ஜலத்திலும், சிதியிலும், புற்றிலும், மலையினுச்சியிலும், தேவாலயத்திலும், நதிக்கரையிலும், தர்ப்பம் புஷ்பம் குசம் இவைகளுண்டாகுமிடங்களிலும், இளைப்பாறக்கூடிய நிழல்களிலும், மரங்களிலும், வழியிலும், பசுக்கொட்டிலிலும், ஜலத்திலும், சாம்பலிலும் மூத்ரம் முதலிய அசுத்தமொன்றை

ஷ்டீவேத் காஸயேந் ந தத்ர முக்த்வாதி கிஞ்சந | திஷ்டேந்நாதி சிரம் தத்ர நைவ கிஞ்சிதுதீரயேத்' இதி ||

யம:—

'துஷாங்காரகபாலாநி தேவதாயதநாநி ச | ராஜமார்கஶ்மஶாநாநி க்ஷேத்ராணி ச கலாநி ச | உபரோஷோநலேவேத ச்சாயாசைத்யம் சதுஷ்பதம் | உதகம் சோதகாந்தம் ச பந்தாநம் ச விவர்ஜயேத் || வ்ருக்ஷமூலாநி ஸர்வாணி சைத்யஶ்வப்ரபிலாநி சே'தி ||

ஹாரீத:—

'வஸதத்வாரயோர்ந மூத்ரபுரீஷே குர்யாத் ந கோமயே ந கோஷ்டே ந தீர்த்தே ந யஜ்ஞபூமௌ ந யஜ்ஞியாநாம் வ்ருக்ஷாணாம் சாயாஸ்வி'தி || உபத்வாரம் = த்வாரஸமீபம் ||

விஷ்ணு:—

'நாநந்தர்ஹிதாயாம் பூமௌ நோஷரே ந ஶாத்வலே நோத்யாநே நோதகஸமீபே நாகாஶ' இதி ||

யும் விடக்கூடாது. அங்கு வெகுநேரம் இருக்கக்கூடாது. ஒன்றும் பேசக்கூடாது.

யமன் :— உமி, கரி, ஓடு, கோவில், ராஜமார்க்கம், மயானம், வயல், களம், நிழல், நாற்சந்தி, ஜலம், ஜலாதாரம், வழி, வ்ருக்ஷத்தினடி, தேவாகாரம், பள்ளம், வளை இவைகளில் விஸர்ஜனம் செய்யக்கூடாது.

ஹாரீதர் :— வாசல், வாசற்படியின் ஸமீபம், சாணம், மாட்டுக்கொட்டில், துறை, யாகபூமி, யாகார்ஹமான விருக்ஷங்களினடி இவைகளிலும் விஸர்ஜனம் கூடாது.

விஷ்ணு :— மறைக்காத பூமியிலும், களர் பூமியிலும், புல் தரையிலும், பூந்தோட்டத்திலும், ஜல ஸமீபத்திலும், ஆகாசத்திலும் விஸர்ஜனம் செய்யக்கூடாது.

[library stamp] ...-600 005.

வ்யாஸ:—

'வல்மீகம் யதிவா ச்சித்ரம் யே [illegible] மாந-
வா: | ராஜமார்கே ஸபாமத்யே தாந்யமத்யே ச [illegible]
ஹா: || வாய்வக்ந்யர்காம்பு கோவிப்ராந் பஶ்யந்நோச்சார-
முத்ஸ்ருஜேத் | நாஶ்மமூலபலாங்காரைர் தர்ப்பைர் ஜ்யாணாய
பஹிஷ்கர்ஷேதி ||

ஸ்ம்ருதிரத்நே—

'நஸோபாநத்பாதுகோ வா ச்சத்ரீ வா நாந்தரிக்ஷகே |
ததைவாபிமுகம் ஸ்த்ரீணாம் குருப்ராஹ்மணயோர்கவா-
மிதி ||

யாஜ்ஞவல்க்ய:—

'நதீச்சாயாபதகோஷ்டாம்புபஸ்மஸு |
ந ப்ரத்யக்ந்யர்ககோஸோம ஸந்த்யாம்புஸ்த்ரீத்விஜந்மந: ||
நேக்ஷேதார்கம் ந நக்நாம் ஸ்த்ரீம் ந ச ஸம்ஸ்ருஷ்டமைதுநாம் |

வ்யாஸர் :— ராஜமார்க்கத்திலும், ஸபையின் நடுவிலும், தான்யங்களின் நடுவிலும் விஸர்ஜனம் செய்யாதவர்கள் நல்லவராவர். காற்று, அக்னி, ஸூர்யன், ஜலம், பசு, ப்ராம்ஹணன் இவர்களைப் பார்த்துக்கொண்டு விஸர்ஜனம் செய்யக்கூடாது. கல், கிழங்கு, பழம், கரி, தர்ப்பம் இவைகளால் மலத்தைத் துடைக்கக்கூடாது.

ஸ்ம்ருதிரத்னத்தில் :— செருப்பு, பாதுகை தரித்தவனையும், குடை பிடித்தவனையும், ஆகாயத்திலும், ஸ்த்ரீகள், குரு, ப்ராம்ஹணன், பசு இவர்களுக்கு எதிராயும் விஸர்ஜனம் செய்யக்கூடாது.

யாக்ஞவல்க்யர் :— நதீ, நிழல், வழி, கொட்டில், ஜலம், சாம்பல் இவைகளிலும், அக்னி, ஸூர்யன், பசு, சந்த்ரன், ஸந்த்யை, ஜலம், ஸ்த்ரீ, ப்ராம்ஹணன் இவர்களுக்கெதிரிலும் விஸர்ஜனம் செய்யக்கூடாது. ஸூர்யனைப் பார்க்கக்கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயையும், ஸங்கமம் செய்துகொண்டிருக்

𑌨 𑌚 𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌵𑌾 𑌨𑌾𑌶𑍁𑌚𑍀 𑌰𑌾𑌹𑍁𑌤𑌾𑌰𑌕𑌾' 𑌇𑌤𑌿 ॥

𑌉𑌦𑌯𑌾𑌸𑍍𑌤𑌮𑌯𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯𑌂 𑌨𑍇𑌕𑍍𑌷𑍇𑌤, 𑌨 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ।

𑌯𑌤𑍋 𑌮𑌨𑍁𑌃—'𑌨𑍇𑌕𑍍𑌷𑍇𑌤𑍋𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌂 𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑌦𑌾𑌚𑌨 । 𑌨𑍋𑌪𑌰𑌕𑍍𑌤𑌂 𑌨 𑌵𑌾𑌰𑌿𑌸𑍍𑌥𑌂 𑌨 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨𑌭𑌸𑍋 𑌗𑌤'𑌮𑌿𑌤𑌿 ॥

𑌉𑌪𑌭𑍋𑌗𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌨𑌗𑍍𑌨𑌾𑌂, '𑌨 𑌨𑌗𑍍𑌨𑌾𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌮𑍀𑌕𑍍𑌷𑍇𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑍈𑌥𑍁𑌨𑌾' 𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌲𑌾𑌯𑌨𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌚 𑌨 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌥𑌾 𑌅𑌶𑍁𑌚𑌿𑌃 𑌰𑌾𑌹𑍁𑌤𑌾𑌰𑌕𑌾𑌶𑍍𑌚 𑌨 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ।

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

'𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍂𑌮𑍍𑌯𑌾𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑌾𑌯 𑌛𑌾𑌯𑌾𑌯𑌾𑌂 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌵𑌾𑌂 𑌤𑍁 𑌛𑌾𑌯𑌾𑌮𑌵𑌮𑍇𑌹𑍇𑌤𑍍 । 𑌨 𑌸𑍋𑌪𑌾𑌨

கும் ஸ்த்ரீயையும், மூத்ரம், மலம் இவைகளையும், அசுத்தனுய் ராகுவையும், நக்ஷத்ரங்களையும் பார்க்கக்கூடாது.

உதயத்திலும் அஸ்தமயத்திலும் ஸூர்யனைப் பார்க்கக் கூடாது. எப்பொழுதும் பார்க்கக்கூடா தென்பதில்லை. ஏனெனில்,

மனு:— உதயத்திலும், அஸ்தமயத்திலும், க்ரஹண காலத்திலும், ஜலத்திலும், ஆகாசத்தின் நடுவிலும் ஸூர்யனைப்பார்க்கக் கூடாது.

நக்னஸ்த்ரீயைப் பார்க்கலாகா தென்பது போககாலம் தவிர மற்றகாலத்தில். 'மைதுன காலமின்றி மற்றகாலத்தில் நக்னஸ்த்ரீயைப் பார்க்கக்கூடா' தென்று ஆச்வலாயனர் கூறியிருப்பதால். மூத்ரம், மலம் இவைகளையும் பார்க்கக்கூடாது. அசுத்தனுய் ராகுவையும், நக்ஷத்ரங்களையும் பார்க்கக்கூடாது என்று பொருள்.

ஆபஸ்தம்பர்:— தலையை வஸ்த்ரத்தால் மறைத்து, பூமியை புல் முதலியதால் மறைத்து, மலமூத்ர விஸர்ஜனம் செய்ய

𑌨 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌥𑍍𑌯𑌪𑍍𑌸𑍁 𑌵𑌾 । 𑌤𑌥𑌾 𑌷𑍍𑌠𑍀𑌵𑌨𑌮𑍈𑌥𑍁𑌨𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌪𑍍𑌸𑍁 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌅𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌖𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌗𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌶𑍍𑌚𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇'𑌦𑌿𑌤𑌿 ॥ 𑌛𑌾𑌯𑌾𑌯𑌾𑌂 = 𑌉𑌪𑌜𑍀𑌵𑍍𑌯𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌯𑌾𑌮𑍍 । '𑌨𑍋𑌪𑌜𑍀𑌵𑍍𑌯𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑍍𑌵𑌿'𑌤𑌿 𑌸𑍍𑌮𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ 𑌷𑍍𑌠𑍀𑌵𑌨𑌂 = 𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌨𑌿𑌰𑌸𑌨𑌮𑍍 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑍇 — '𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑌨𑍍 𑌅𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌕𑌾𑌷𑍍𑌠𑌤𑍃𑌣𑌪𑌰𑍍𑌣𑌾𑌦𑌿𑌕𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌨𑌿𑌵𑍀𑌤𑌂 𑌕𑌣𑍍𑌠𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑍇𑌦𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌨𑌿𑌧𑌾𑌯, 𑌭𑍁𑌵𑌂 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍌𑌨𑌂 𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌸𑍍𑌯𑌪𑌿𑌧𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌦𑌿𑌵𑌾 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌯𑍋𑌰𑍁𑌦𑌙𑍍𑌮𑍁𑌖𑍋 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍁𑌖𑍋 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑍇 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌫𑌾𑌲𑌕𑍃𑌷𑍍𑌟𑍇 𑌜𑌲𑍇 𑌚𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑍇 𑌗𑌿𑌰𑌿𑌮𑌸𑍍𑌤𑌕𑍇 । 𑌦𑍇𑌵𑌾𑌲𑌯𑍇 𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌦𑌰𑍍𑌭𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌶𑌾𑌦𑍍𑌵𑌲𑍇 ॥

வேண்டும். நிழலில் விஸர்ஜனம் செய்யக்கூடாது. தன்னுடைய நிழலில் செய்யலாம். பாதரக்ஷை தரித்து செய்யக்கூடாது. உழுத ஸ்தலத்திலும், வழியிலும், ஜலத்திலும் கூடாது. ஷ்டீவனம் மைதுனம் இவைகளை ஜலத்தில் செய்யக்கூடாது. அக்னி ஸூர்யன் ஜலம் ப்ராம்ஹணன் பசு தேவதைகள் இவர்களுக்கு எதிராக மூத்ரமலங்களை விடக்கூடாது. நிழல் என்பதற்கு பிறருக்கு உபகாரகமான நிழல் என்பது பொருள். அவ்விதம் ஸ்ம்ருதி சொல்லுவதால். ஷ்டீவனம் என்பதற்குக் கோழை உமிதல் என்று பொருள்.

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:— மலமூத்ரவிஸர்ஜனம் செய்ய விரும்பியவன் யக்ஞார்ஹமல்லாத கட்டை, புல், இலை இவைகளிலொன்றை எடுத்து, தலையை வஸ்த்ரத்தால் மறைத்து, பூணூலை நிவீதமாய் கழுத்தில் தொங்கவிட்டு, ஒரு வஸ்த்ரத்துடனிருந்தால் பூணூலை வலது காதில் வைத்துக் கொண்டு, பூமியை கட்டை முதலியதால் மறைத்து மௌனமாய், மூக்கையும், வாயையும் வஸ்த்ரத்தால் மறைத்து, பகலிலும் ஸந்த்யைகளிலும் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். உழுத பூமி, ஜலம், சிதி,

ஸேவ்யச்சாயாஸு வ்ருக்ஷேஷு மார்கே கோஷ்டாம்பு-பஸ்மஸு | அக்னௌ ச கச்சம்ஸ்திஷ்டம்ஶ்ச விண்மூத்ரே நோத்ஸ்ருஜேத் || ரத்யாவகரதீர்த்தேஷு ஶ்மஶானே கோமயே ஜலே | ந ஸஸ்யமத்யே கோஷ்டே ச ஜநஸம்ஸதி வர்த்மநி | அங்காராராமயோர்ந ஸப்ராணிபஞ்ஜர யஜ்ஞபூமிஷு நோத்ஸ்ருஜேத் | மாருதாக்ந்யர்க்ககோஸோமஸந்த்யாம்புஸ்த்ரீத்விஜந்மந: || பஶ்யந்ஹி ஸர்வஶஶ்சைவ விண்மூத்ரம் ச நோத்ஸ்ருஜேத் | ஸர்வே நிஷேதா நைவ ஸ்யு: ப்ராணபாதாபயேஷு து || காஷ்டாதிநா குதாநஸ்த மலலேப்யம் நிர்ம்ருஜீத ச | கந்தமூலபலாங்காரை: நாமலேப்யம் நிர்ம்ருஜீத ச || அந்யாவஸதமநா நைவ திஷ்டேச்சிரம் பயாத்' இதி ||

வாராஹே—

'தேவாலயே து பரித: ஶததண்டாத்பஹிர்த்யஜேத் |
விண்மூத்ரகரணம் கார்யம் க்ரோஶாத்பஹிரதாபி வே'தி ||

புற்று, மலையினுச்சி, தேவாலயம், நதிக்கரை, தர்ப்பம், புஷ்பம், புல்லுள்ள தரை, உபகாரகமான நிழல், மரம், வழி, கொட்டில், ஜலம், சாம்பல், அக்னி இவைகளிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. ராஜ வீதி, நாற்சந்தி, இறங்கும் துறை, மயானம், சாணம், ஜலம், பயிர்களின் நடுவு, ஜனக்கூட்டம், வழி, கரி, தோட்டம், ப்ராணி களுள்ள இடம், யாகபூமி இவைகளிலும், வாயு, அக்னி, ஸூர்யன், பசு, சந்த்ரன், ஸந்த்யை, ஜலம், ஸ்த்ரீ, ப்ராம்ஹணன் இவர்களைப்பார்த்தும், எதிராகவும், மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. ப்ராணபாதையுள்ள காலத்திலும், பய முள்ள இடத்திலும் எல்லா நிஷேதங்களும் ப்ரவர்த்திப்ப தில்லை. கட்டை முதலியதால் குதத்திலுள்ள மலத்தைத் துடைக்கவேண்டும். கிழங்கு, வேர், பழம், கரி இவைகளால் துடைக்கக்கூடாது. வேறிடத்தில் மனதுடன் வெகுகாலம் இருக்கக்கூடாது.

புராணத்தில்:— கோவிலின் நான்கு புறத்திலும் நூறு கோலளவுக்கப்புறத்தில், அல்லது ஒரு க்ரோசத்திற்கப்புறத் தில் மலமூத்ர விஸர்கம் செய்யவேண்டும்.

𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃—

'𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑍃𑌲𑍍𑌲𑍋𑌷𑍍𑌟𑌕𑌾𑌷𑍍𑌠𑌤𑍃𑌣𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌵𑌾𑌸𑌾 𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 𑌦𑍃𑌢𑌂 𑌵𑌿𑌧𑍃𑌤𑌮𑍇𑌹𑌨𑌃' 𑌇𑌤𑌿 ॥ 𑌮𑍇𑌹𑌨𑌂 = 𑌶𑌿𑌶𑍍𑌨𑌮𑍍 ॥

𑌹𑌾𑌰𑍀𑌤𑌃—

'𑌲𑍋𑌷𑍍𑌟𑍇𑌨 𑌵𑌿𑌶𑍀𑌰𑍍𑌣𑍇𑌨 𑌶𑍁𑌷𑍍𑌕𑌕𑌾𑌷𑍍𑌠𑍇𑌨 𑌵𑌾 𑌮𑍃𑌜𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥

𑌵𑍍𑌯𑌾𑌸𑌃—

'𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑍀𑌰𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑍈𑌃 । 𑌕𑌾𑌶𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌾𑌣𑌾𑌮𑍇𑌵𑌮𑌾𑌯𑍁𑌰𑍍𑌨 𑌹𑍀𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌃—

'𑌅𑌶𑍍𑌮𑌾𑌨𑌂 𑌲𑍋𑌷𑍍𑌟𑌮𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑍋𑌷𑌧𑌿𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍀𑌨𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌾𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌯𑍋𑌶𑍍𑌶𑍁𑌨𑍍𑌧𑌨𑍇 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑌿 ॥ 𑌫𑌲𑌪𑌾𑌕𑌾𑌵𑌸𑌾𑌨𑌾𑌃 = 𑌓𑌷𑌧𑌯𑌃 । 𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌰𑍍𑌵𑌿𑌨𑌾 𑌯𑍇 𑌫𑌲𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌯𑌃 । 𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌶𑍁𑌷𑍍𑌕𑍇𑌷𑍁 𑌨 𑌦𑍋𑌷𑌃 । 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌆𑌤𑌪𑌾𑌦𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑍇𑌨

பாரத்வாஜர் :— விஸர்ஜனம் செய்தபிறகு மண்கட்டி, கட்டை, புல் முதலியவற்றால் மலமூத்ரங்களைத் துடைத்து, வஸ்த்ரத்தை உயர்த்திக்கொண்டு, ஆண்குறியை நன்றாய் பிடித்துக் கொண்டு எழுந்திருக்கவேண்டும்.

ஹாரீதர் :— மண்கட்டி அல்லது உலர்ந்த கட்டையினால் குதத்தைத் துடைக்கவேண்டும்.

வ்யாஸர் :— இடது கையினால் யக்ஞார்ஹமல்லாத கோரை முதலியவையால் மூத்ரமலங்களைத் துடைக்கவேண்டும். இவ்விதம் செய்பவனுக்கு ஆயுள் குறைவதில்லை.

ஆபஸ்தம்பர் :— கல்லினாலும், மண்கட்டியாலும், ஈரமுள்ளதும், உயர்ந்து நின்றிருப்பதுமான ஓஷதிகளையும் வனஸ்பதிகளையும் சேதித்து அவைகளாலும், மூத்ரபுரீஷங்களைத் துடைக்கக்கூடாது. ஓஷதிகளென்பவை பலித்தவுடன் அழிந்துபோகும் செடிகளாம். வனஸ்பதிகளென்பவை பூக்காமல் பலிக்

ஶுஷ்கே ந தோஷ: । வாதாத்யாதிபி: உச்ச்ரிதத்வாபா-
வாத்பதிதாநாம் ந நிஷேத இத்யர்த்த: ॥

கௌதமோऽபி—

'ந பர்ணலோஷ்டாஶ்மபிர்மூத்ரபுரீஷாபகர்ஷ-
ணம் குர்யா'திதி ॥ அத்ர லோஷ்டப்ரதிஷேத: காஷ்டாதி
ஸம்பவே வேதிதவ்ய: ॥

ஹாரீத:—

'ஆஹாரம் ச ரஹ: குர்யாத் நீஹாரம் சைவ
ஸர்வதா । குப்தாப்யாம் லக்ஷ்மீவாந்ஸ்யாத் ப்ரகாஶே
ஹீயதே ஶ்ரியே'தி ॥

---

* அத ஶௌசவிதி: ॥ *

தத்ர தேவல:— 'ஆஶௌசாத்த்யஜேச்சிஶ்நம் ப்ரஸ்ரா-
வோச்சாரயோரபி । பாயும் ஹஸ்தம் ச ம்ருஜ்ஜலாப்யாம் ஸம்ஶோ-
தயேந்முஹுர்முஹு'ரிதி ॥

கும் செடிகளாம். ஈரமுள்ள என்றதால் உலர்ந்தவைகளுக்குத் தோஷமில்லை. உயர்ந்து நிற்கு மென்றதால் காற்று முதலியவைகளால் ஒடிந்தவைகளுக்குத் தோஷமில்லை யென்பதாம்.

கௌதமரும் :— இலை, மண்கட்டி, கல் இவைகளால் மூத்ர புரீஷங்களைத் துடைக்கக்கூடாது. இங்கு மண்கட்டியை நிஷேதித்தது, சொல்லிய கட்டை முதலியவை கிடைக்கும் பக்ஷத்தில் என்று அறியவும். கிடைக்காவிடில் மண்கட்டியால் செயலாமென்பதாம்.

ஹாரீதர் :— ஆஹாரம், மலமூத்ரத்யாகம் இவைகளை எப்பொழுதும் ரஹஸ்யமான இடத்தில் செய்யவேண்டும். ரஹஸ்யமாய்ச் செய்தால் லக்ஷ்மியுடன் கூடுவான். பிரகாசமாய்ச் செய்தால் லக்ஷ்மியால் விடப்படுவான்.

இனி சௌசவிதி.

தேவலர் :— மலமூத்ர விஸர்கங்களில் சௌசம் வரையில் சிச்னத்தை விடக்கூடாது. மண்ணாலும், ஜலத்தாலும் குதம், கை இவைகளை அடிக்கடி அலம்பவேண்டும்.

ஸ்ம்ருத்யந்தரே—

உத்தா²ய வாமஹஸ்தேந க்³ருஹீத்வாऽத்⁴வநி மேஹநம் । ஶௌசதே³ஶம் ஸமேத்யாத² குர்யாச்சௌசம் ம்ருத³ம்பு³பி⁴'ரிதி ॥

யாஜ்ஞவல்க்ய:—

'க்³ருஹீதஶிஶ்நஶ்சோத்தா²ய ம்ருத்³பி⁴ரப்⁴யுத்³த்⁴ருதைர்ஜலை: । க³ந்த⁴லேபக்ஷயகரம் ஶௌசம் குர்யாத³தந்த்³ரித:' இதி ॥ அப்⁴யுத்³த்⁴ருதை:= கமண்ட³ல்வாதி³நா உத்³த்⁴ருதை: ॥

ததா² ச தே³வல:—

'மூத்ரோச்சாரே க்ருதே ஶௌசம் ந ஸ்யாத³ந்தர்ஜலாஶயே । அந்யத்ரோத்³த்⁴ருத்ய தத்தோயாத் ஸர்வதை³வ ஸமாஹித'இதி ॥

த³க்ஷோऽபி—

'தீர்தே² ஶௌசம் ந குர்வீத குர்வீதோத்³த்⁴ருதவாரிணா । ம்ருத்திகாவாரித³ஶ்சாஸ்ய ஶௌசஜ்ஞ: பரிசாரக:' இதி ॥

மற்றொரு ஸ்ம்ருதியில் :— எழுந்து செல்லும்போது வழியில் இடதுகையால் சிச்னத்தைப் பிடித்துக்கொண்டு, சௌசம் செய்யுமிடத்திற்குவந்து, மண் ஜலமிவைகளால் சௌசம் செய்துகொள்ளவேண்டும்.

யாக்ஞவல்க்யர் :— சிச்னத்தை க்ரஹித்துக் கொண்டெழுந்து மண்களாலும், வெளியிலெடுத்த ஜலங்களாலும், சோம்பலில்லாதவனாய் நாற்றமும் பற்றும் போகும் வரையில் சௌசம் செய்துகொள்ளவேண்டும். இங்கு எடுத்தஜலமென்பதற்குக் கமண்டலு முதலியதா லெடுக்கப்பட்டதென்று பொருள். அவ்விதமே,

தேவலர் :— மலமூத்ர விஸர்கம் செய்தபிறகு, குளம் முதலியதின் உட்புறத்தில் சௌசம் செய்யக்கூடாது. ஜலத்தை எடுத்து ஜலாசயத்திற்கு வெளியிலேயே செய்யவேண்டும். எக்காலத்திலும் இதை மறக்கக்கூடாது.

தக்ஷர் :- ஜலாசயத்தில் சௌசம் செய்யக்கூடாது. எடுத்த ஜலத்தால் செய்யவேண்டும். மண்ணையும் ஜலத்தையும் கொடுக்

बोधायनः—

'प्राङ्मुख उदङ्मुखो वाऽऽसीनश्शौचमाचरेत्' इति ॥

गौतमोऽपि—

'प्राङ्मुख उदङ्मुखो वा शौचमाचरेत्' इति ॥ 'शौचग्रहणं सर्वत्राचमनादिशौचेऽपि यथा स्यात् । सन्ध्या वन्दने चाचमनं' इति हरदत्तव्याख्यातम् ॥

तथा स्मृतिरत्ने—

'उद्धृतोदककाष्ठाय मृत्तिकां चैव वाग्यतः । उदङ्मुखो दिवा कुर्याद्रात्रौ चेद्दक्षिणामुखः' इति ॥

यमः—

'कूलादेरन्तिकात् प्राज्ञः कर्दमाच्च ससिकतात् या । शौचशेषे तु सा ग्राह्या शर्कराश्मविवर्जिता ॥ नावाश्रयाच्च वल्मीकात् पांसुलात् न च

கும் இருகைகளும் இவனுக்குச் சௌசத்தை அறிந்த பரிசாரகர்களாகின்றனர். இடதுகையால் மண்ணையும் வலதுகையால் ஜலத்தையும் சேர்த்து சௌசம் செய்யவேண்டுமென்பதாம்.

போதாயனர் :— கிழக்கு அல்லது வடக்கு முகமாய் உட்கார்ந்து சௌசம் செய்துகொள்ளவேண்டும்.

கௌதமரும் :— கிழக்கு, அல்லது வடக்குமுகமாயிருந்து சௌசம்—ஆசமனம் செய்யவேண்டும். இங்கு சௌசமென்ற பதத்தை க்ரஹித்தது மலமூத்ராதி சௌசங்களையும் சொல்வதற்காக, ஆசமனத்தில் மட்டிலும் என்பதில்லை, என்று ஹரதத்தரின் வ்யாக்யானம்.

அவ்விதமே ஸ்ம்ருதிரத்னத்தில் :— எடுத்துவைத்த ஜலத்தையும், மண்ணையும் க்ரஹித்துக்கொண்டு மௌனியாய், பகலில் வடக்கு முகமாகவும், ராத்ரியில் தெற்கு முகமாகவும் சௌசம் செய்துகொள்ளவேண்டும்.

யமன் :— அறிந்தவன் மணலுடன் கலந்த கரையிலிருந்து மண்ணை க்ரஹிக்கவேண்டும். சுத்தமான இடத்திலுள்ளதைச்

ஶர்கராஶ்ச । ந மார்காத் ஊஷராச்சைவ ஶௌசஶிஷ்டாஶ்ச பரஸ்ய ச ॥ ஏதாஸ்து வர்ஜயேந்நித்யம் வ்யர்தா ஶௌசம் ஹி தத் ஸ்ம்ருதம்' இதி ॥

ஆஶ்வலாயந:—

த்யாகாந்மூத்ரபுரீஷஸ்ய பூர்வம் க்ருஹ்ணீத ம்ருத்திகாம் । ந ச ப்ரஹ்வோ ந சோத்திஷ்டந் நாஶுசிர்ந ச பாஷந் த்விஜ: ॥ ஆக்நேய்யாதிவாயவ்யதிங்முகோ நாஹரேந்ம்ருதம் । க்ஷேத்ராச்ச்மஶாநாத்வல்மீகாந்மார்காத் க்ருஹாஜ்ஜலாத் கலாச்ச ॥ ஊஷராச்சைவ தேவஸ்தாநாத் ஶுசேர் ந ம்ருதமாஹரேத் । நாஶுசேர்தேவாலயாச்சைத்யாச்ச ந வேத்யா கோஷ்டஜாம் ம்ருதம் ॥ ஆஹரேச்சைவலாக்ராந்தாம் ச ஜந்துமிஶ்ராம் ந ஶர்கராம்' இதி ॥

தேவல:—

'அங்காரதுஷகீடாஸ்திவாலுகாஶர்கராந்விதாம் । வல்மீகோஷரதோயாந்த:குட்யோத்யாஹ்ருதாம் ஶ்மஶாநஜாம் ॥ ஆ

சுக்கான், கல் இவைகளில்லாமல் க்ரஹிக்கவேண்டும். எலி பறித்தவிடம், புற்று, புழுதி, சேர், வழி, களர்நிலம், பிறன் சௌசம் செய்து மீந்தது இவைகளிலிருந்து மண்ணை க்ரஹிக்கக்கூடாது. க்ரஹித்துச் செய்தால் அந்த சௌசம் வீணாகும்.

ஆச்வலாயனர் :— மூத்ரபுரீஷ விஸர்ஜனத்திற்கு முன்பே ம்ருத்திகையை க்ரஹிக்கவேண்டும். குனிந்துகொண்டும், நின்றுகொண்டும், அசுத்தனும், பேசிக்கொண்டும், அக்னி திக்கு முதல் வாயுதிக்கு வரையிலுள்ள திக்குகளை நோக்கியவனும் ம்ருத்திகையை க்ரஹிக்கக்கூடாது. வயல், மயானம், புற்று, வழி, வீடு, ஜலம், களம், களர்நிலம், கோயில், அசுத்தஸ்தலம், சைத்யம், யாகஸ்தலம், கொட்டில் இவைகளிலிருந்தும் க்ரஹிக்கக்கூடாது. பற்றுள்ளதும், ஜந்துக்களுடன் கூடியதும், சேறுமுள்ள மண்ணை க்ரஹிக்கக்கூடாது.

தேவலர் :— கரி, உமி, புழு, அஸ்தி, மணல், சுக்கான் இவைகளுடன் கூடியதும், புற்று, களர்பூமி, ஜலத்தின் நடுவு, சுவர், ச்மசானம், பிறர் சௌசத்திற்குக் கொண்டுவந்தது இவைகளிலிருந்தும் ம்ருத்திகையை க்ரஹிக்கக்கூடாது. இங்கு

𑌸𑍍𑌰𑍁𑌤𑌾𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌥𑌲𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌦𑍃𑌤 𑌨 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌽𑌽𑌹𑌰𑍇𑌦𑌿𑌤𑌿 ॥ 𑌤𑍋𑌯𑌾𑌤𑍍:— 𑌜𑌲𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌏𑌤𑌚𑍍𑌚 𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

𑌅𑌤 𑌏𑌵 𑌮𑌨𑍁:—

'𑌵𑌾𑌪𑍀𑌕𑍂𑌪𑌤𑌡𑌾𑌗𑍇𑌷𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌤𑍋 𑌨𑌾𑌹𑌰𑍇𑌨𑍍𑌮𑍃𑌦𑌮𑍍 । 𑌆𑌹𑌰𑍇𑌜𑍍𑌜𑌲𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑌰𑌤𑍋 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌦𑌿𑌤𑌿 ॥ 𑌏𑌤𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌮𑍍 ॥

𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑌤𑍍𑌨𑍇 𑌤𑍁—

'𑌜𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌪𑌰𑌤𑍋 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 । 𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍍𑌵𑌾𑌹𑌰𑌣𑌂 𑌨𑌚𑍇𑌤𑌿 ॥

𑌮𑍃𑌦𑌾𑌹𑌰𑌣𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌦𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌹 𑌮𑌰𑍀𑌚𑌿:—

'𑌵𑌿𑌪𑍍𑌰𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾 𑌤𑍁 𑌮𑍃𑌚𑍍𑌛𑍌𑌚𑍇 𑌰𑌕𑍍𑌤𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌹𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾 𑌵𑍈𑌶𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌰𑌪𑍀𑌤𑌿 ॥

'ஜலத்தின் நடுவு' என்றது நீரோடை முதலியதைத் தவிர்த்து மற்ற ஜலமத்ய விஷயம். ஆகையாற்றான்,

